தினமணி

# வேதாரண்யத்தில் சம்பா நெல் சாகுபடி பாதிக்கும் அபாயம்

கே.பி. அம்பிகாபதி

First Published : 16 Nov 2011 05:37:08 AM IST



வேதாரண்யத்தை அடுத்த ஆதனூர் பகுதி மானாவாரி நிலத்தில் தண்ணீர் இல்லாமல் வளம் குன்றியுள்ள நேரடி விதைப்பு சம்பா நெல் வயல்.

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் இறைவைப் பாசனத் திட்டத்தில் பின்னடைவு, உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நிகழாண்டு சம்பா நெல் சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பருவ மழை பின்னடைவு: வடகிழக்குப் பருவமழை காலத்தில் வேதாரண்யம் பகுதியில் இயற்கையாகவே அதிக மழைப் பொழிவு இருக்கும். ஆனால், பருவநிலை மாறுபாடு, சுற்றுச்சூழல் பாதிப்பு, இந்தப் பகுதியில் அதிகரித்து வரும் ஊசியிலை தாவர வகையைச் சேர்ந்த சவுக்கு, நீர்வளத்தை அதிக அளவில் கிரகிக்கும் தைல வகை மரங்களின் சாகுபடி பரப்பு அதிகரிப்பு போன்றவற்றால் மழைப் பொழிவு கடந்த சில ஆண்டுகளாகவே குறைந்து வருகிறது.

மானாவாரி நிலப் பரப்பை அதிகமாகக் கொண்டுள்ள வேதாரண்யம் பகுதியில் நிகழாண்டு வடகிழக்குப் பருவமழையானது தொடக்கத்திலிருந்தே சீராக இல்லை. இதனால், இங்கு நேரடி விதைப்பு முறையில் மேற்கொள்ளப்படும் சம்பா நெல் சாகுபடிப் பணிகளும் தாமதமாகவே தொடங்கின.

இறைவைப் பாசனம்: மானாவாரி பரப்பில் பல இடங்களில் உள்ள வயல்களில் இன்னும் தண்ணீர் தேங்காத நிலையில், வழக்கத்துக்கு மாறாக தொடர்ந்து வறண்ட வானிலையே நிலவி வருகிறது.

வேதாரண்யம் பகுதியில் 10,500 ஹெக்டேரில் மானாவாரி சாகுபடி மேற்கொள்ளப்படுவது வழக்கம். இதில் இப்போது 8,316 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இங்குள்ள தகட்டூர், வாய்மேடு, தென்னடார், வண்டுவாஞ்சேரி மருதூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள அரசின் மின் இறைவைப் பாசனத் திட்ட பொறிமனைகளில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட்டு, திறன் குறைந்தவையாக இருப்பதாகக் கூறும் விவசாயிகள், குறைந்த அளவு நீரையும் பெற மும்முனை மின்சாரம் சீராகக் கிடைப்பதில்லை என்கின்றனர்.

தாமதமாகும் பயிர்க் கடன்: கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன், உரம் ஆகியவை பல இடங்களில் தாமதமாகி வருகிறது.

இதுகுறித்து ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் என். சந்திரசேகரன் கூறியது:

குறிப்பாக, மருதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடந்த ஆண்டில் இதே நாளில் 50 சதவீத கடன், 15 லோடு உரம் வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு கடன் வழங்கப்படுவது தாமதமாகி வருகிறது. ஒரு லோடு உரம் மட்டுமே வங்கிக்கு வந்துள்ளது. கடன் கிடைக்காததால், வயல்களில் பராமரிப்புப் பணிகளை செய்ய முடியவில்லை என்றார் அவர்.

வருவாய்த் துறையினர் வழங்கும் சான்றிதழ் தாமதமாக வழங்கப்பட்டதும் இதற்கு ஒருகாரணமாகக் கூறப்படுகிறது.

அறிவிக்கப்படாத பயிர்க் காப்பீடு: கடந்த 2010-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுக்கான விவரம் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. இதனால், இழப்பீட்டை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் நாகை மாவட்டச் செயலாளர் எஸ். சம்பந்தம் கூறியது:

கடந்த ஆண்டுக்கான காப்பீடு குறித்த விவரங்கள் இதுநாள்வரை அறிவிக்கப்படவில்லை. 20 நாள்களுக்குள் நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் கடந்த மாதம் நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் உறுதியளித்தார். ஆனால், இதுவரை நடவடிக்கை இல்லை. இதனால், இந்த ஆண்டு பெரும்பாலான விவசாயிகள் காப்பீடு செய்ய முன்வரவில்லை. இதில் தமிழக அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

விவசாயிகளின் முக்கிய பிரச்னைகளை களைவதற்கு அரசு போதிய கவனம் செலுத்தி, சம்பா நெல் சாகுபடியில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணை மீண்டும் திறப்பு

First Published : 15 Nov 2011 01:09:22 PM IST

நாகர்கோவில், நவ.14:÷பேச்சிப்பாறை அணை பாசனத்துக்காக திங்கள்கிழமை மீண்டும் திறக்கப்பட்டது.

÷சில நாள்களுக்கு முன் பெய்த தொடர் மழையால் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது.

÷இந்நிலையில் இப்போது மழை ஓய்ந்ததால் அணையிலிருந்து மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

÷திங்கள்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 286 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

÷அணையில் காலை 8.30 மணி நிலவரப்படி 24.70 அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு விநாடிக்கு 137 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

÷பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 53.20 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 161 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.÷இந்த அணை பாசனத்துக்காக திறக்கப்படவில்லை.

÷சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 4.13 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 26 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 4.23 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 41 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

÷மழையளவு:÷திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மாவட்டத்தில் அணைப்பகுதிகளிலும் பிறஇடங்களிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

÷பேச்சிப்பாறை- 10, பெருஞ்சாணி- 6.2, சிற்றாறு 1- 31, சிற்றாறு 2- 2, பூதப்பாண்டி- 1.4, சுருளோடு- 2, பாலமோர்- 2.2, சுருளோடு- 2, மயிலாடி- 6, புத்தன்அணை- 6.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வீட்டுத் தோட்டத்தில் சாத்துக்குடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,00:00 IST

வீட்டுத் தோட்டத்தில் சாத்துக்குடியை சாகுபடி செய்ய ஆசைப்படுபவர்கள் ஒட்டுக்கன்றுகளை நடவேண்டும். ஆந்திரா மாநிலத்தில் உள்ள கோடூர், ராஜமுந்திரி போன்ற இடங்களில் செயல்பட்டு வரும் நாற்றுப்பண்ணைகளில் ஒட்டுக் கன்றுகளை வாங்கி உபயோகிக்கலாம். கன்றுகளை நடுவதற்கு நல்ல மேட்டுப் பாங்கான இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். பின் 2 அடி ஆழம், 2 அடி அகலம் மற்றும் 2 அடி உயரம் இருக்கும்படி குழி தயார் செய்ய வேண்டும்.



குழி எடுக்கும்போது மேல் மண் தனியாகவும், அடி மண் தனியாகவும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் இவ்வாறு எடுத்த குழியில் மேல் மண்ணினை முதலில் இட்டு பின் அடி மண்ணுடன் நன்கு மக்கிய தொழு உரம் 2 கிலோ இட்டு நன்கு கலக்கி கலவையை குழியில் தேவைப்பட்ட மண்ணுடன் கலந்து குழியை நிரப்ப வேண்டும். பின் குழியின் நடுப்பகுதியில் கன்றின் ஒட்டுப்பகுதி மேலே தெரியும்படி நட்டு மண் போட்டு மூடி தண்ணீர் விடவேண்டும். நடும்போது 3 அடி உயரமுள்ள குச்சியை நட்டு கன்று காற்றில் ஆடாமல் கட்டவேண்டும். அவ்வப்போது ஒட்டு பாகத்தின் கீழ் வளரும் துளிர்களை கிள்ளி அகற்றிவிட வேண்டும். கன்றுகளை நட்டு கவனமாக பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஆடி, ஆவணி மாதங்களில் மழை வரும் சமயம் நல்ல மக்கிய சாணி உரத்தை போட்டுவர வேண்டும். ஏற்கனவே விவரித்தபடி மரத்திற்கு நுண்ணூட்டச் சத்துக்களை இட்டு வருவதோடு அதனைத் தாக்கும் பிசின் வடியும் நோய் வராமல் தடுத்து வரவேண்டும். மரங்கள் செழிப்பாக வளர்ந்து சுவையான பழங்களை நமக்குத்தரும்.

**அறுவடை - மகசூல்**: ஒரு வருடத்தில் இருமுறை அறுவடை வரும். முதல் அறுவடை செப்டம்பர்-அக்டோபர், இரண்டாவது அறுவடை பிப்ரவரி -மார்ச். மகசூலானது மரங்களின் வயது மற்றும் மண்வளம் பொறுத்து மாறுபடும். சராசரியாக ஒரு மாதத்தில் ஒரு அறுவடையில் 250 பழங்கள் கிடைக்கும் (35-40 கிலோ).-எஸ்.எஸ்.நாகராஜன்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,00:00 IST



**லவங்கப்பட்டையில் புதிய ரகங்கள் எஸ்எல்63, ஐஎன்189**: இந்தியாவில் முதன் முதலாக இரண்டு லவங்கப்பட்டை ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோழிக்கோட்டிலுள்ள இந்திய வாசனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தில் இந்த ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சின்னமோயம் வீரம் என்ற தாவரப் பெயர் கொண்ட லவங்கப் பட்டை லாரேசி என்ற தாவரக்குடும்பத்தைச் சார்ந்தது. லவங்க மரத்திலிருந்து எடுக்கப்படும் காய்ந்த உள்பட்டைதான் லவங்கப் பட்டை. இதன் பிறப்பிடம் இலங்கையாகும். இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டது.

கேரளத்திலுள்ள கண்ணூரை அடுத்துள்ள அஞ்சரகண்டி என்ற கிராமத்திலுள்ள ஏண்டாதாரா எஸ்டேட்டில் சுமார் 85 எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப் பட்டு வரும் தோட்டம்தான் ஆசியாவிலேயே பெரிதான லவங்கத் தோட்டமாக இருக்கக்கூடும். தமிழகத்தில் நீலகிரி, கீழ்பழநி மலைப்பகுதிகள், குற்றாலம், கன்னியாகுமரி மற்றும் கர்நாடகாவில் தென்கனரா ஜில்லாவிலும் லவங்கப்பட்டை சாகுபடி செய்யப்படுகிறது.

எஸ்எல்63 என்ற இலங்கை ரகமும் ஐஎன் 189 என்ற இந்திய ரகமும் இந்தியா முழுவதும் பயிரிட உகந்தவையாகும். நட்ட முதல் 3 ஆண்டுகளுக்கு இடைவெளிப்பயிராக பயறு வகைப்பயிர்களான தானிய வகைப் பயிர்கள் மற்றும் விதை வாசனைப்பயிர்கள் ஆகியவற்றை லவங்கத் தோட்டத்தில் பயிர்செய்து லாபம் அடையலாம். இந்த இரு வகைகளையும் மானாவாரியாகப் பயிரிடலாம். நட்ட ஒரு ஆண்டுக்கு மட்டும் நிழல் தந்து இவற்றைப் பேண வேண்டும்.

இந்த லவங்கப்பட்டை ரகங்களைப் பயிரிட்டு விளைச்சலை அதிகரித்து உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன் தரமுள்ள பட்டை, பட்டை எண்ணெய், இலை எண்ணெய் மற்றும் பட்டை ஒலியோரெசின் ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்யலாம்.
(தகவல்: பி.கிருஷ்ணமூர்த்தி, முதுநிலை விஞ்ஞானி, இந்திய வாசனைப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம், கோழிக்கோடு-673 012).

**பயிர்ப்பூச்சி கட்டுப்பாட்டில் பவேரிய பேசியானா பூசணம்**: இப்பூசணம் எல்லா மண் வகைகளிலும் காணப்படுகிறது. பூசணத்தின் வித்துக்கள் பூச்சி, புழுக்களின் மேல் பட்டவுடன் சாதகமான சூழ்நிலையில் அவை முளைத்து பூசண இழைகளைத் தோற்றுவிக்கின்றன. இப்பூசணம் நொதிப் பொருட்களை உற்பத்தி செய்து மேற்புற தோலினை சிதைத்து பூச்சியின் உடலுக்குள் ஊடுருவிவிடுகிறது. அங்கு நச்சுப்பொருளை உற்பத்தி செய்து பூச்சியின் வயிற்றில் உள்ள பாக்டீரியாவை எளிதில் அழித்து, பூசணம் உடல் முழுவதும் வளர்ந்து பரவி பூச்சியைச் செயலிழக்கச் செய்து கொன்றுவிடுகிறது.
இப்பூசணம் மக்காச்சோள பயிரில் உட்சென்று நீர் உறிஞ்சும் குழாய்களில் தங்கி தாவர உட்பூசணமாகச் செயல்பட்டு இப்பயிரினைத் தாக்கும் தண்டு துளைப்பான்களை சிறப்பான முறையில் கட்டுப் படுத்துவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. நன்மை செய்யும் இப்பூசணம் வணிக ரீதியில் பல்வேறு பெயர்களில் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தாவர நோயியல் துறையில் இப்பூசணம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கிலோ விலை ரூ.100. துகள் வடிவில் வழங்கப்படும் இப்பூசணத்தை மண்வழியாகவும், இலை வழியாகவும் பயிர்களுக்கு பயன்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைக்கும் முன் மண்ணில் இடவேண்டும்.
இலையை உண்ணும் புழுக்கள், சாறு உறிஞ்சும் பூச்சிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். (**தகவல்**: த.தினகரன், கோ.அர்ச்சுணன், வானொலி உழவர் சங்க செய்திக்கதிர், அக்டோபர் 2011)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

செவ்வந்தி

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,00:00 IST

பூவைப் பொறுத்தவரை ஐப்பசி, கார்த்திகை மாதத்தில் செவ்வந்திப் பூவுக்கு தேவை அதிகமாக இருக்கும். நல்ல விலையும் கிடைக்கும். சித்திரையில் செடி நட்டால் ஐப்பசியில் அறுவடை செய்ய முடியும்.

மஞ்சள் செவ்வந்தி, வெள்ளை செவ்வந்தி, சின்ன செவ்வந்தி (இதுவும் மஞ்சளாக இருக்கும்) மூன்று வகை உண்டு. நடவு செய்த ஏழு மாதத்தில் அறுப்புக்கு வந்துவிடும். வாரம் ஒரு தடவை வீதம் ஐந்து அல்லது ஆறு முறை பூ எடுக்கலாம். மொத்தம் எட்டு மாத சாகுபடி, ஒரு முறைக்கு 800 கிலோ கிடைக்கும். ஏக்கருக்கு கணக்குப் பார்த்தால் சராசரியாக 4000 முதல் 4500 கிலோ வரை பூ கிடைக்கும். சந்தையில் இருக்கும் பூக்களின் வரத்தைப் பொறுத்து கிலோ பத்து ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரை விலைபோகும். சராசரி மகசூல் 4000 கிலோ சராசரி விலை கிலோ 25 ரூபாய் என்று கணக்கு போட்டாலே ஒரு லட்ச ரூபாய் வரை கிடைக்கும்.

நிலத்தை நன்கு உழவு செய்து, வெங்காய பாத்திபோல அமைத்து, நாலு விரல் இடைவெளி இருப்பது போல் இரண்டு இரண்டு வேர்களாக வரிசையில் நடவேண்டும். வேர்களை நடும்போது, அடிவேர், நுனிவேர் பார்த்து ஜாக்கிரதையாக நடவேண்டும். அடிவேரைப் பார்த்து நிலத்தில் நடவேண்டும். மாற்றி நடவுசெய்தால் செடிகள் வளராது.

நாற்பதுநாள் இடைவெளியில் மொத்தம் 3 தடவை களை எடுக்க வேண்டும். வாரத்திற்கு இரண்டு தடவை தண்ணீர் கொடுக்க வேண்டும். முதல் தடவை களை எடுப்பதற்கு 20 ஆட்களும், அடுத்தடுத்த இரண்டு களைகளுக்கு 15 ஆட்கள் வீதமும் மொத்தம் 50 ஆட்களுக்கு வேலை இருக்கும். களையெடுத்த பிறகு இரண்டு மூடை டிஏபி, இத்துடன் 100 கிலோ கடலைப் பிண்ணாக்கு கொடுக்க வேண்டும்.

பூ வெடிக்கும் சமயத்தில் செடி கீழே சாய்வதற்கு வாய்ப்பு இருக்கும். அதைத்தடுக்க, செடிகளுக்கு மண் அணைப்பதோடு, அருகில் சிறு குச்சிகளை நட்டு, அவற்றில் கயிறு மூலம் கட்டிவிடுவது அவசியம். அசுவினி, வெள்ளை ஈ இரண்டும் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதற்கு மோனோகுரோட்டோபாஸ், செவின் பவுடர் ஆகியவற்றைச் சேர்த்து அடிக்க வேண்டும். மழை அதிகமாக இருந்தால் செடிகள் கீழே சாய்ந்துவிடும். எல்லாவற்றையும் சமாளித்து முடித்தால் நல்ல அறுவடைதான்.

சித்திரையில் விதைப்பவர்கள் ஊடுபயிராக வெங்காயத்தையும் சேர்த்து விதைப்பார்கள். ஒரு

வரிசையில் செவ்வந்தி, அடுத்த வரிசையில் வெங்காயம் என விதைப்பார்கள். 45ம் நாளில் வெங்காயம் அறுவடை ஆகிவிடும். இதன்மூலம் செலவு போக ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

**ஒரு ஏக்கருக்கான செவ்வந்தி சாகுபடி**

செலவு - வரவு கணக்கு (ரூபாயில்) விபரம் செலவு வரவு

உழவு 1,500

தொழு உரம் 1,200

பார் அமைத்தல் 1,000

நாற்று (வேர் வெட்டுதல், வேர் நீக்குதல் உட்பட) 1,180

தண்ணீர் பாய்ச்சும் கூலி (மாதம்ரூ.1000வீதம் ஏழு மாதத்திற்கு) 7,000

நடவு 1,200

களை எடுக்க 3,000

உரம் இரண்டு தடவை (டிஏபிகடலை புண்ணாக்கு) 2,700

பூச்சி மருந்து (தெளிப்புச் செலவு உட்பட) 850

இதர செலவுகள் 750

பூ விற்பனை மூலம் வரவு 70,000

மொத்தம் 20,380 70,000

நிகர லாபம் 49,620-அகமது கபீர், தாராபுரம், 93607 48542.

**திருந்திய நெல் சாகுபடி வேளாண் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,05:31 IST

கடையநல்லூர் : டையநல்லூர் வட்டார பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி திடல்களில் வேளாண்மை உதவி யக்குநர் ஆய்வு மேற்கொண்டார். கடையநல்லூர் வட்டார பகுதிகளில் பாசன பருவ நெல் சாகுபடி பணி தீவிரமாக நடந்து வருகிறது. வேளாண்மை துறை அலுவலர்கள் வழங்கிய ஆலோசனைபடி திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைபிடித்து நாற்றுபாவுதல் மற்றும் நடவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடையநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள், வேளாண்மை அலுவலர் முருகையா, வேளாண்மை உதவி அலுவலர்கள் ராமநாராயணன், முருகேசன், அட்மா தலைவர் சரவணகுமார் ஆகியோர்

கடையநல்லூர், கிருஷ்ணாபுரம், வைரவன்குளம் பகுதிகளுக்குட்பட்ட நெட்டுபத்து, காடேரிகால் பகுதிகளில் நடவு செய்துள்ள திருந்திய நெல்பயிரை பார்வையிட்டு கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை விளக்கி கூறினர். அம்பை-16 ரகம் சாகுபடி செய்துள்ள வயல்களில் குலைநோய் மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதல் தென்பட்டது. இதனை கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் ஏக்கருக்கு 400 மில்லி மற்றும் கினோசான் ஏக்கருக்கு 200 மில்லி மற்றும் ஒட்டும் திரவம் 200 மில்லி மருந்தினை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின் போது மாவட்ட கவுன்சிலர் மாரியம்மாள், முத்துப்பாண்டி, பூசைத்துரை, அருணாசலதேவர், கருத்தப்பாண்டி, மருதையாதேவர், பொன்னுத்துரை உள்ளிட்ட விவசாயிகள் உடனிருந்தனர். திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகள் கோனாவீடர் களைக்கருவியை பயன்படுத்தி களையை உரமாக்குவதுடன் தேவைக்கேற்ப இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்து உரங்களை இடுவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டது.

**விவசாயிகளுக்கு தட்டுபாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,05:31 IST

கடையநல்லூர் : பிசான சாகுபடிக்கு விவசாய நிலங்களுக்கு உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெல்லை மாவட்ட உர வியாபாரிகள் சங்க தலைவர் குலாம் மைதீன் வலியுறுத்தியுள்ளார்.இதுகுறுத்து உர வியாபாரிகள் சங்க தலைவர் கூறியதாவது: நெல்லை மாவட்டத்தில் பிசான சாகுபடி பணி துவங்கி விட்டது. பல இடங்களில் பெய்த மழைகளால் குளங்களும் நிரம்பியுள்ளன. தற்போது பிசான சாகுபடிக்கான நடுவை பணிகள் நடந்து வருகிறது. இந்த பணிகளுக்கு விவசாயிகளுக்கு தேவையான உரம் கிடைப்பது மாவட்டத்தில் அரிதாகி வருகிறது. அடியுரமான காம்ப்ளக்ஸ், டிஏபி, சூப்பர் பாஸ்பேட் உரங்கள் தற்போது கிடைக்கப்பெறாத நிலை காணப்பட்டு வருகிறது. கிடைக்கும் உரங்களும் அதிக விலை கொடுத்துதான் வாங்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். உரம் விலை மாதத்திற்கு இரண்டு முறை உயர்த்தப்பட்டு ருகிறது.மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு பிசான சாகுபடியை தடையின்றி மேற்கொள்ளும் வகையில் உரவிலையை கட்டுப்படுத்தி போதுமான அளவில் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு உரங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், தனியார் உரக்கடைகள் மூலமாகவும் வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மானாவரி நிலக்கடலை அறுவடை செய்வது எப்படி? பயிற்சி மைய வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,01:39 IST

திருச்சி: மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலையை அறுவடை செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்து திருச்சி உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் பொன்னுசாமி தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்டம் துறையூர், முசிறி, தா.பேட்டை, முசிறி, வையம்பட்டி மற்றும் மணப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரியாக நிலக்கடலை பெருமளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. இவற்றை அறுவடை செய்யும்போது கையாள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் துணை இயக்குனர் பொன்னுசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நிலக்கடலையில் கொத்து ரக நிலக்கடலை 100 முதல் 105 நாட்களிலும், படரும் வகை நிலக்கடலை 130 முதல் 135 நாட்களிலும் அறுவடை செய்ய ஏற்ற காலமாகும். நிலக்கடலை அறுவடை செய்யும்போது, கடலை விதைகள் நிலத்தில் தங்காமல் வர வேண்டுமானால், போதுமான அளவு மண்ணில் ஈரப்பதம் இருக்க வேண்டும். மகசூலில் இழப்பு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், காய்கள் முற்றிய நிலையில் அறுவடை செய்ய வேண்டும். காலம் தாழ்த்தி அறுவை செய்வதாலும் விழுதுகள் வழுவிழந்து முற்றிய காய்கள் (நிலக்கடலை) மண்ணிலேயே தங்கிவிடும். காய்களின் ஈரப்பதம் 35 முதல் 40 சதவீதம் அளவுக்கு இருக்கும் போது, அறுவடை செய்து செடிகளில் இருந்து காய்களை உடனே பறிக்கக்கூடாது. அறுவடை செய்த செடிகளை காய்கள் வெளியில் தெரியும் வகையில் ஒன்றன் மீது ஒன்றாக இரண்டு நாட்களுக்கு வைத்து உலர்த்திய பின்னர் காய்களை பிரித்தெடுக்க வேண்டும். அறுவடை செய்ய காய்களை ஏழு முதல் ஒன்பது சதவீதம் வரை ஈரப்பதம் குறையுமளவு காய வைக்க வேண்டும். அவ்வாறு காய வைக்கவில்லை எனில் "ஆஸ்பர் ஜில்லஸ்' என்ற உடல் நலத்தை பாதிக்கும் பூசான தாக்குதல் ஏற்படும். இந்த பூசான தாக்குதலால் அந்த காய்களின் முளைப்பு திறன் குறையும். ஈரக்காயாக விற்பதை விட உலர வைத்து விற்பதால் அதிக லாபம் பார்க்கலாம். விதைப்புக்கு பயன்படுத்தப்படும் நிலக்கடலை காலை அல்லது மாலை வேளைகளில் ஈரப்பதம் 10 சதவீதமாக இருக்கும்படி காய வைக்கவேண்டும். நிலக்கடலை காயாக ஆறு முதல் எட்டு மாதம் வரையிலும், பருப்பாக இருந்தால் மூன்று முதல் நான்கு மாதம் வரை கெடாமல் பாதுகாக்க முடியும். விதை கடலை மூட்டைகளை மட்டும் ஐந்து மூட்டை வரை அடுக்க வேண்டும். அதற்கு மேல் அடுக்கினால் விதை கடலையின் தரம் குறையும். பலகை, பாலிதீன் பேப்பர், உமி ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை தரையில் போட்டு, அவற்றின் மீது மூட்டைகளை அடுக்கி வைக்கவேண்டும். மூட்டைகளை சுவற்றிலிருந்து இரண்டு அடி இடைவெளியிட்டு அடுக்கவேண்டும்.

**வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப சாகுபடி பயிற்சி முகாம் நடப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,01:46 IST

ஆலங்குடி: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்பங்களைக் கொண்டு சாகுபடி மேற்கொள்வது குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள தொழில் நுட்பங்களை கொண்டு சாகுபடி மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வம்பன் வேளாண் அறிவியல் நிலையம், குரும்பூர் சி.ஐ.டி., பாரி சர்க்கரை அரைவை நிறுவனமும் இணைந்து நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தலைவர் சின்னையன் தலைமை வகித்தார். இ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலையின் தலைவர் ராதாகிருஷ்ணன் பயிற்சியை துவக்கி வைத்தார். இ.ஐ.டி., பாரி பொதுமேலாளர் அருணாச்சலம், உழவர் பயிற்சி அலுவலர் வேளாண் அறிவியல் உதவி பேராசிரியர் நடராஜன் ஆகியோர் ஒற்றை பரு நாற்றாங்கால் தயார் செய்தல், விதை நேர்த்தி, நிலத்தடி சொட்டு நீர் அமைத்தல், உர நிர்வாகம், நீர் நிர்வாகம், கரும்பு பயிர்களில் பூச்சிகள் மற்றும் நோய் நிர்வாகம், களை மேலாண்மை, தோகை உரித்தல், விட்டம் கட்டுதல் உள்ளிட்டவைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

**நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற தொழில்நுட்பம் கடைபிடிக்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,02:57 IST

சேந்தமங்கலம்: "திருந்திய நெல் சாகுபடியில், அதிக மகசூல் பெற, தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும்' என, சேந்தமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் வரதராஜு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
சேந்தமங்கலம் வட்டாரத்தில், தற்போது நெல் நடவு பணி துவங்கி உள்ளதால், திருந்திய நெல் சாகுபடியில் கீழ்கண்ட, 12 தொழில் நுட்பங்களை கடைபிடித்து, அதிக மகசூல் பெறலாம். தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் நெல் ரகங்களை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய இரண்டு கிலோ விதைகள் தேவை. ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு செண்ட் நாற்றங்கால் போதுமானது. 14 நாட்கள் வயதான நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமன் செய்யப்பட வேண்டும். இடைவெளிக்கு மார்கர் கருவியை பயன்படுத்த வேண்டும். 22.5 செ.மீ.,க்கு, 22.5 செ.மீ., இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்துக்கு ஒரு நாற்று நடவு செய்தல் வேண்டும். நீர் மறைய நீர் பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீ.,க்கு

அதிகமாக நீர் நிறுத்தக்கூடாது. கோனா வீடர் களையெடுக்கும் கருவியை கொண்டு நடவு செய்த, 10ம் நாள் முதல், 10 நாட்களுக்கு ஒருமுறை என, நான்குமுறை களை எடுக்க வேண்டும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி, தேவையான தழைச்சத்தினை மேலுரமாக இடவேண்டும். இத்தகைய தொழில் நுட்பங்களை கடைபிடித்தால், ஒரு ஹெக்டேருக்கு ஏழு டன் மகசூல் கிடைக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கருப்பட்டி விலை கிலோ ரூ. 7 உயர்வு கேரளாவுக்கு அதிகளவில் ஏற்றுமதி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 16,2011,02:49 IST

கோபிசெட்டிபாளையம் : மழையால் கருப்பட்டி உற்பத்தி குறைவு காரணமாக கிலோவுக்கு, ஏழு ரூபாய் அதிகரித்ததால், கருப்பட்டி உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகள் விவசாய நிலங்களை அதிகம் கொண்ட பகுதி. தென்னை மற்றும் பனை மரங்கள் அதிகம் உள்ளன. தமிழகத்தில் கள் இறக்க தடை விதிக்கப்பட்டதால், கருப்பட்டி வெல்லம் காய்ச்சி விற்பதை, ஆயிரக்கணக்கான விவசாயிகள் பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர். கோபி, சிறுவலூர், காட்டுச்சாலை, மீன் கிணறு, காக்கிபாளையம், குருமந்தூர், குன்னத்தூர், கடத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் தென்னை மற்றும் பனை கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பனை மரங்களில் இருந்தும், ஜூன் முதல் நவம்பர் வரை தென்னை மரங்களில் இருந்தும் பதநீரை இறக்கி கருப்பட்டி தயார் செய்யப்படுகிறது. பனை கருப்பட்டி இரண்டு மாதத்துக்கு முன் உற்பத்தி நின்றது. தென்னை கருப்பட்டி உற்பத்தியாகிறது. ஒரு தென்னை மரத்தில் நாள் ஒன்றுக்கு ஆறு லிட்டர் வரை பதநீர் கிடைக்கும். 18 லிட்டர் பனை பதநீரை காய்ச்சினால்தான் 10 கிலோ கருப்பட்டி வெல்லம் கிடைக்கிறது. சில நாட்களாக கோபி சுற்று வட்டாரத்தில் மழை பெய்வதால் பதநீர் இறக்குவது குறைந்துள்ளது. கருப்பட்டி உற்பத்தியும் குறைந்து விட்டது.கருப்பட்டி தேவை அதிகரித்துள்ள நிலையில், கருப்பட்டி வரத்து குறைந்ததால் கருப்பட்டி விலை 10 கிலோவுக்கு 59 ரூபாயும், கிலோவுக்கு 6.90 ரூபாயும் அதிகரித்துள்ளது. ஒரே நாளில் கிலோவுக்கு ஏழு ரூபாய் வரை உயர்ந்ததால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். கருப்பட்டி உற்பத்தியாளர்கள் கூறியதாவது:கோபி மற்றும் குன்னத்தூர் சுற்று வட்டாரத்தில் பனை மற்றும் தென்னை கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது. சென்ற இரண்டு மாதத்துக்கு முன் பனை கருப்பட்டி உற்பத்தி நிறுத்தப்பட்டது. தென்னை கருப்பட்டி உற்பத்தி மட்டும் உள்ளது. கோபி, நம்பியூர் உள்பட சுற்றுவட்டார பகுதிகளில் நடப்பாண்டு அதிகளவில் புகையிலை பயிரிடப்பட்டுள்ளது. புகையிலையை பதப்படுத்தி காய வைக்க, பனை கருப்பட்டி அவசியம் தேவைப்படுவதால் தேவை அதிகரித்துள்ளது. மேலும், தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில பனை கருப்பட்டி

அனுப்பப்படுகிறது. இதனால், கருப்பட்டி விலை உயர்ந்துள்ளது. சென்ற வாரம் 10 கிலோ கருப்பட்டி 351 ரூபாய்க்கு விற்கப்பட்டது; நடப்பு வாரம் 410 ரூபாயாக உயர்ந்தது. 10 கிலோ கருப்பட்டிக்கு 59 ரூபாய் அதிகரித்துள்ளது. கருப்பட்டி விலை உயர்ந்ததால் கோபி வட்டார விவசாயிகள் கருப்பட்டி உற்பத்தியில் தீவிரம் காட்ட துவங்கி உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கொண்டைக்கடலை விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 15,2011,23:29 IST

உடுமலை : நடப்பு பருவத்தில் கொண்டைக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.பெதப்பம்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குனர் செல்வராஜ் அறிக்கை:கொண்டைக்கடலை சாகுபடியில் பூஞ்சாண நோயை தடுக்க, ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது திரவம் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்த பிறகு விதைக்க வேண்டும்.விதை நேர்த்தி செய்த ஒரு எக்டருக்கான விதையை மூன்று பாக்கெட் ரைசோபியம் மற்றும் 3 பாக்கெட் பாஸ்போபாக்டீரியாவை ஆறிய கஞ்சியில் கலந்து நிழலில் அரை மணி நேரம் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும்.அதிக மழை அல்லது தண்ணீர் தேங்கினால் கொண்டைக்கடலை செடியில் வேர் அழுகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை தடுக்க ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 10 கிராம் அளவில் விதை நேர்த்தி செய்த பின் விதைக்கவும்.உயிர் உர விதை நேர்த்தி செய்யாவிட்டால், 10 பாக்கெட் øரேசோபியம் மற்றும் 10 பாக்கெட் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை 25 கிலோ மக்கிய எரு மற்றும் மணலுடன் கலந்து விதைக்கும் முன் நிலத்தில் இட வேண்டும்.உரநிர்வாகம்: மண் பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளை இட வேண்டும். மானாவாரி பயிருக்கு 12.5 கிலோ: 25 கிலோ 12.5 கிலோ தழை:மணி சாம்பல் சத்துகளையும், இறவை பயிருக்கு 25:50.25 கிலோ தழை; மணி;சாம்பல் சத்துகளையும் ஒரு எக்டருக்கு இட வேண்டும். ஒரு எக்டருக்கு 2 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டத்தை மணலுடன் கலந்து விதைப்பிற்கு முன் நிலத்தில் சீராக இட வேண்டும்.களை நிர்வாகம்: விதைத்த பின் மூன்று நாள் கழித்து பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஒரு எக்டருக்கு 2 லிட்டர் என்ற அளவில் தெளித்தும், 25-30 நாட்கள் கழித்து கைக்களை எடுக்க வேண்டும்.ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு: பயிரில் காய்த்துளைப்பானை கட்டுப்படுத்த எண்டோசல்பான்; குயினால்பாஸ்; கார்பரில் குருணை மருந்தை ஒரு எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் இடவேண்டும்.ஒரு எக்டர் பயிருக்கு ஒரு லிட்டர் எண்டோசல்பான் 35 ஈசி., அல்லது குயினால்பாஸ் 25 ஈ.சி., தெளிக்கவும்.

இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த 2.5 கிராம் மேன்கோசெப் அல்லது 1 கிராம் கார்பன்டசிம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.சாம்பல் நோயை கட்டுப்படுத்த டைத்தேன் எம்45, அல்லது கார்பன்டசிம் 2.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். சாகுபடி குறித்த சந்தேகங்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களையும், வட்டார வேளாண் விரிவாக்க மையத்தையும் அணுகலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தினகரன்

**விரலி மஞ்சள் விலை குவின்டால் ரூ.500 உயர்வு**

பதிவு செய்த நாள் : 11/16/2011 0:15:36



ஈரோடு : ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தினந்தோறும் நடக்கும் மஞ்சள் ஏலத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் கலந்து கொள்கின்றனர். தரம் வாரியாக பிரிக்கப்பட்ட மஞ்சளை பார்த்து, அதன் தரத்திற்கு ஏற்ப விலையை குறிப்பிட்டு டெண்டரில் கலந்து கொள்கின்றனர். கடந்த ஒரு வாரமாக மஞ்சள் விலை இறங்குமுகமாக இருந்தது.

இந்நிலையில், விரலி ரக மஞ்சள் விலை மட்டும் நேற்று ஒரே நாளில் குவின்டாலுக்கு ரூ.500 வரை உயர்ந்தது. நேற்று முன்தினம், ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒரு குவின்டால் விரலி மஞ்சள் ரூ.4,331 முதல் ரூ.4,772 வரை விலை போனது. நேற்று நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் ரூ.4,749 முதல் ரூ.5,269 வரை விற்பனை ஆனது. இதேபோல நேற்று முன்தினம் குவின்டால் கிழங்குமஞ்சள் அதிகபட்சமாக ரூ.4,836க்கு விற்பனையானது.

நேற்று குவின்டாலுக்கு ரூ.200 உயர்ந்து அதிகபட்சமாக ரூ.4,836க்கு விற்பனையானது. நேற்று முன்தினம் குறைந்தபட்சமாக ரூ.4,089க்கு விற்ற கிழங்கு மஞ்சள் நேற்று ரூ.4,439 ஆக இருந்தது. அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நேற்று 1,141 மூட்டை மஞ்சள் வந்தன. 1,031 மூட்டை விற்பனையானது. சரிந்து வந்த விரலி மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.500 உயர்ந்திருப்பது விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்துள்ளது.

## *நடப்பு நிதி ஆண்டின் முதல் 6 மாதங்களில் இந்தியாவின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 29 சதவீதம் அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் (ஏப்ரல் – செப்டம்பர்) ஏலக்காய், மிளகாய், இஞ்சி, வெந்தயம் உள்ளிட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் மதிப்பின் அடிப்படையில் 29 சதவீதம் அதிகரித்து ரூ.3,220.16 கோடியிலிருந்து ரூ.4,165.58 கோடியாக உயர்ந்துள்ளது.*
*அதேசமயம், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 19 சதவீதம் சரிவடைந்து 2.94 லட்சம் டன்னிலிருந்து 2.37 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 32 சதவீதம் அதிகரித்து 69.93 கோடி டாலரிலிருந்து 92.06 கோடி டாலராக உயர்ந்துள்ளது.*
*அமெரிக்க டாலர்*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், ஒட்டுமொத்தத்தில் அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு உயர்ந்து இருந்தது. இதனால்தான், டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 32 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 29 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்நிலையில், சென்ற சில மாதங்களாக ரூபாய் மதிப்பு மிகவும் சரிவடைந்து வருகிறது. எனவே, இனிவரும் மாதங்களில் ரூபாய் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதியில் சிறப்பான வளர்ச்சி ஏற்படும் என வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.*

*முதல் ஆறு மாதங்களில், மதிப்பு அடிப்படையில், நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதற்கு ஏலக்காய் மற்றும் இஞ்சி ஆகிய நறுமண பொருள்களே முக்கிய காரணமாகும்.*

*சிறிய ஏலக்காய் ஏற்றுமதி மூன்று மடங்கு அதிகரித்து ரூ.39.84 கோடியிலிருந்து ரூ.160.99 கோடியாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், பெரிய ஏலக்காய் ஏற்றுமதி ரூ.9.96 கோடியிலிருந்து இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.22.67 கோடியாக உயர்ந்துள்ளது. இஞ்சி ஏற்றுமதியும் இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.35.87 கோடியிலிருந்து ரூ.90.02 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது. அதேசமயம், பூண்டு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 93 சதவீதம் சரிவடைந்து 1,010 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில் 90 சதவீதம் சரிவடைந்து ரூ.58.99 கோடியிலிருந்து ரூ.5.98 கோடியாகவும் குறைந்துள்ளது. தனியா ஏற்றுமதி 50 சதவீதம் சரிவடைந்து 13,500 டன்னாக குறைந்துள்ளது. பெருஞ்சீரகம் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 38 சதவீதம் சரிவடைந்து 5,625 டன்னிலிருந்து 3,500 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில் 29 சதவீதம் குறைந்து ரூ.34.17 கோடியாகவும் குறைந்துள்ளது.*

*இலக்கு*

*நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில் ரூ.6,500 கோடி மதிப்பிற்கு (145 கோடி டாலர்) 5 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், முதல் ஆறு மாதங்களில் ரூபாய் மற்றும் டாலர் மதிப்பு அடிப்படையில் 64 சதவீதம் ஏற்றுமதியாகியுள்ளது. எனவே, மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் விஞ்சி சிறப்பான அளவில் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.*

*அதேசமயம், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 47.4 சதவீதமாக உள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலவி வரும் மந்தநிலையே இதற்கு காரணமாகும். இருப்பினும், நறுமண பொருள்கள் வாரியம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால் அளவின் அடிப்படையிலும் இலக்கை எட்ட முடியும் என வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.*

*அன்னிய செலாவணி*

*ஏற்றுமதி அதிகரிப்பதால் நாட்டின் அன்னியச் செலாவணி வருவாய் அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி மேம்படும். வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். நடப்பு கணக்கு பற்றாக்குறை கட்டுக்குள் வரும். எனவே, தரமான நறுமண பொருள்களை தயாரித்து சர்வதேச அளவில் வாடிக்கையாளர்களை ஈர்த்து வருவாயை அதிகரிக்க நறுமண பொருள்கள் வாரியம் திட்டமிட்டுள்ளது.*

*நறுமண பொருள்கள் ஏற்றுமதியை அடுத்த ஒன்பது ஆண்டுகளுக்குள் ரூ.30,000 கோடிக்கும், 2025–ஆம் ஆண்டுக்குள் ரூ.50,000 கோடிக்கும் உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

# ரூபாயின் வெளிமதிப்பு சரிவால் டீ.ஏ.பி. உரம் இறக்குமதி செலவினம் ரூ.3,500 உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
சண்டிகார்
அமெரிக்க டாலருக்கு எதிராக இந்தியா ரூபாயின் வெளிமதிப்பு சரிவடைந்து வருவதால், ஒரு டன் டீ.ஏ.பி. உரத்தை இறக்குமதி செய்வதற்கான செலவினம் ரூ.3,500 உயர்ந்துள்ளதாக இந்திய விவசாயிகள் உர கூட்டு நிறுவனத்தின் (இஃப்கோ) உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
டாலர் மதிப்பு
கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரு டாலர் மதிப்பு ரூ.44.80–ஆக இருந்தது. இது, தற்போது ரூ.50–ஐ தாண்டி உள்ளது. ஒரு டன் டீ.ஏ.பி. உரத்தின் விலை 677 டாலர் என்று வைத்துக் கொண்டால், ஒரு டாலர் ரூ.44.80–ஆக இருக்கும்போது அதன் விலை சுமார் ரூ.30,350 ஆகும். ஒரு டாலர் மதிப்பு ரூ.50–ஆக உயரும்போது இதன் விலை ரூ.33,850–ஆக அதிகரித்துவிடும். இவ்வாறாக ரூபாய் மதிப்பு சரிந்து, டாலர் மதிப்பு உயரும்போது இறக்குமதி விலை அதிகரிக்கிறது.
இஃப்கோ நிறுவனம், டீ.ஏ.பி. உரத்தை அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், மொராக்கோ, துனிஷியா, இஸ்ரேல், ஜோர்டான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. சென்ற நிதி ஆண்டில் 80 லட்சம் டன் உரத்தை இறக்குமதி செய்தது. நடப்பு நிதி ஆண்டில் 60 லட்சம் டன் இறக்குமதி செய்ய உள்ளது.
ரூபாய் மதிப்பு சரிவால், இறக்குமதி செலவினம் அதிகரித்து வரும் நிலையில், சர்வதேச சந்தைகளில் டீ.ஏ.பி. உர விலை உயர்ந்து வருகிறது. கடந்த ஜூன் மாதத்தில் விலை (ஒரு டன்) 612 டாலராக இருந்தது. தற்போது 677 டாலராக (சுமார் ரூ.33,850) உயர்ந்துள்ளது.
அதேசமயம், இஃப்கோ நிறுவனம் உள்நாட்டில் இந்த உரத்தை ரூ.18,100–க்கு (ஒரு டன்) விற்பனை செய்கிறது. இது, அடக்க விலைக்கும் குறைவாக இருப்பதால், மத்திய அரசு டன் ஒன்றிற்கு ரூ.19,700 மானியம் வழங்குகிறது.
யூரோ
இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடன் சுமையில் சிக்கி தவிப்பதால், டாலருக்கு எதிராக யூரோ மதிப்பு சரிவடைந்துள்ளது. இதன் தாக்கம் நம் நாட்டிலும் எதிரொலித்தது. இந்நிலையில், இறக்குமதியாளர்களும் அதிக அளவில் டாலர்களை கொள்முதல் செய்கின்றனர். இதனால் செவ்வாய்க்கிழமை அன்று ஒரு டாலரின் மதிப்பு கடந்த 32 மாதங்களில் இல்லாத அளவிற்கு 50.67–ஆக உயர்ந்தது. அதாவது, ரூபாய் மதிப்பு குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை ரூபாயின் மதிப்பு 12 சதவீதம் குறைந்துள்ளது. ஆசிய நாட்டு செலாவணிகளில் இந்திய ரூபாயின் வெளிமதிப்பில்தான் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.